

ராணிப்பேட்டையில் நடந்த தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான ஆர்.காந்தி பேசினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன் கே.சுந்தரம், அ.அசோகன் எம்.எஸ். கலைமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று (11.09.2023) திருக்கோயில் சார்பில் 8 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசைகளை வழங்கி, திருமணத்தம்பதிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் எஸ்.ராஜப்பா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி பாரதி, உதவி ஆணையாளர் சுரேஷ் உட்பட பலர் உள்ளனர்.

### இந்து அறநிலையத்துறை சார்பில்

# 8 ஜோடிகளுக்கு திருமணம்! ரூ.4.37 இலட்சத்தில் சீர்வரிசைகள்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி நடத்தி வைத்து வழங்கினார்!

திண்டுக்கல், செப்.12-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி இந்து அறநிலையத்துறை சார்பில் திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 8 ஜோடிகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசைகளை வழங்கினார். திருமணத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய பொது மக்களின் இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.50,000 மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தப்பட்டது. தற்போது கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்துக்களின் திருமணத்திற்கு தேவையான 4 கிராமில் திருமாங்கல்யம், மணமகன் ஆடை ரூ.1000, மணமகள் ஆடை ரூ.2000, திருமணத்திற்கு மணமகன், மணமகள் வீட்டார் 20 நபர்களுக்கு உணவு ரூ.2000, மாலை, புஷ்பம் ரூ.1000, பீரோ ரூ.7800, கட்டில் ரூ.7500, மெத்தை ரூ.2200, இரண்டு தலையணை ரூ.190, ஒரு பாய் ரூ.180, இரண்டு கைக்கடிகாரம் ரூ.1000, ஒரு மிக்சி ரூ.1490, பூஜை பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் ரூ.3640 என மொத்தம் ரூ.30,000 மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் மற்றும் 4 கிராம் தங்கம் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் முதற்கட்டமாக திண்டுக்கல் இணை ஆணையர் மண்டலத்திற்குட்பட்ட திண்டுக்கல் மாவட்டத்தில் 2 இணைகளுக்கும், தேனி மாவட்டத்தில் 5 இணைகளுக்கும் என மொத்தம் 7 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 8 இணைகளுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப் பட்டுள்ளது. அதன்படி, நடப்பு ஆண்டில் இதுவரை திண்டுக்கல் இணை ஆணையர் மண்டலத்தில் மொத்தம் 22 இணைகளுக்கு திருக்கோயில்களின் சார்பில் இலவச திருமணம் நடத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் இன்று நடைபெற்றுள்ள இலவச திருமண விழாவில் 8 இணைகளுக்கு திருமணம் நடத்தப்பட்டு சுமார் ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர்.ராஜப்பா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை இணை ஆணையர் பாரதி, உதவி ஆணையாளர் சுரேஷ், செயல் அலுவலர்கள் வேலுச்சாமி, முருகன், பால சரவணன், இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


30 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.09.2023



க.வீரைய்யா Ex,MP.

தந்தை பெரியாரிடம் பயின்று
அண்ணாவின் லட்சிய தீபத்தை தாங்கி பிடித்து
கலைஞரோடு ஒன்றாக பயணித்து
தளபதியின் உழைப்புக்கு உயர்வு தந்து
கழக வழியில் தடம் பிறழாமல்
எங்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கே
காலமெல்லாம் உங்கள் நெறியில்....

தலைவர் தளபதியின்
தலைமையில்
என்றைக்கும் இயக்கம் காப்போம் உங்கள் வழியில்...

மு.க.இராமகிருஷ்ணன்
ஒன்றிய கழகச் செயலாளர்,மாவட்ட கவுன்சிலர்

Dr.மு.க.முத்துக்கருப்பன் M.B.B.S., DMRD., MDRD.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்

க.வீரைய்யா Ex,MP. குடும்பத்தினர்கள்
புதுக்கோட்டை


### அரியலூர் மாவட்டம்

# கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் மா.மதிவேந்தன் - சா.சி.சிவசங்கர் மேற்கொண்டனர்!

அரியலூர்,செப், 12-

அரியலூர் மாவட்டம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் மேலகருப்பூர் ஊராட்சியில் அரியலூர் வனச்சரக புதிய நாற்றாங்காலினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் புலம்பெயரும் நீர்ப்பறவைகளுக்கான, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான நன்னீர் ஏரிகளுள் ஒன்றாக விளங்குகிறது. மாநிலத்தின் பெரிய ஏரிகளுள் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இச்சிறப்புமிக்க அரியலூர் வனக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கரை வெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் அரியலூர் வனச்சரகம், அரியலூர் வனக்கோட்டத்தில் புதிய நாற்றாங்கால் அமைக்கப்பட்டுள்ளதை இன்றையதினம் வனத்துறை அமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் உள்ள புதை உயிரிப் படிவ அருங்காட்சியகத்தினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம. ச. கலைவாணி, முதன்மை தலைமை வனக்காவலர் சென்னை சுபரத் மொஹபத்ரா தலைமை வனக்காவலர் திருச்சி சதிஷ் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், வனச்சரக அலுவலர் முத்துமணி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ் செல்வன், ஆர்.ஜி.மணிவேல், நெடுஞ்செழியன்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் மு.பழனிசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் ரவி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, மனோஜ், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாபதி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் டி.எம்.அருண், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆசை.அன்பு, எல். கே.அருண் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய தலைவர் இமானுவேல் சேகரன் அவர்களின் 66வது நினைவு தினத்தை முன்னிட்டு கழக அலுவலகத்தில் வைக்கப்பட்ட அன்னாரது திருஉருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மலர்தூவி மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். ஸ்ரீதர்**

**செப்டம்பர் 12 (2020)**



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.